தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண் 265/ந/2022
நாள் 04.05.2023

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம். – எதிர் மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 19.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2022 அன்று பெறப்பட்டு 265/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாவட்டம், திருமங்கலம் டவுன், நகராட்சிக்கு உட்பட்ட கணபதி நகர், இராஜாஜி தெரு, அரசினர் ஆதிதிராவிட மாணவியர் விடுதி அருகில் டவுன் சர்வே வார்டு A, செங்குளம், பிளாக் எண். 25, பழைய சர்வே எண். 131/5–ல் கட்டப்பட்ட 32 செண்ட் இடமானது ஸ்ரீமாலையம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடம் ஆகும்.

திருக்கோவில் இடத்தை இரண்டு நபர்கள் திரு.ராஜீ மகன் விஜய் மற்றும் திரு. ஸ்ரீதரன் மகன் மதன் ஆகியோர் சட்டத்திற்கு புறம்பாக பட்டா பெற்றுள்ளார்கள். அதன் உட்பிரிவு 159/3

மற்றும் 159/2 டவுன் சர்வே எண், மேற்படி நபர்கள் இரண்டு பட்டா பெற்று ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். மேலும் சிலர் பட்டா பெறாமல் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இதுகுறித்து புகார் மனுவை 5/12/2022 தேதியில் பதிவு தபாலில் (RT 550376915 TN) புகார் அளித்தும் இன்று வரை எந்த நடவடிக்கையும் திருமங்கலம் நகராட்சி ஆணையர் அவர்கள் எடுக்கவில்லை, ஆணையர் அவர்கள் போலியாக சட்டத்திற்கு புறம்பாக பட்டா பெற்ற நபர்களுடன் கைகோர்த்துக் கொண்டு நடவடிக்கை எடுக்காததினால் நான் மாண்புமிகு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தை நாட வேண்டியுள்ளது.

எனவே, மேற்படி ஸ்ரீமாலையம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான 32 சென்ட் இடத்தில் தற்போது கோவில் கட்டடம் 6 சென்ட் இடம் மட்டும் தான், மீதம் உள்ள 28 சென்ட் இடத்தை மேற்படி நபர்களும் மற்றும் சிலரும் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள்.

திருக்கோவில் சொந்தமான இடம் பழைய புல எண்.131/5, புதிய டவுன் சர்வே எண்.159/1–ல் கட்டப்பட்ட இடத்தை முழுமையாக அளந்தும், அத்துமால் காண்பித்தும், கல் ஊன்றியும் ஆக்கிரமிப்புகளை தயவு தாட்சயமின்றி முழுமையாக அகற்றியும், போலியாக பட்டா பெற்ற நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கவும், பட்டாவை இரத்து செய்ய வருவாய்த்துறை மூலம் நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையர் மற்றும் பட்டா வழங்கிய அதிகாரிகள் மற்றும் இதற்கு உடந்தையாக இருந்த அரசு அலுவலர்கள் – நகராட்சி மற்றும் வருவாய் துறையினர் மீது துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும், மேற்படி இடத்தை ஆக்கிரமிப்புகளில் இருந்து மீட்டெடுத்து அந்த இடத்தை வருவாய்த்துறை ஆவணங்களில் ஸ்ரீ மாலையம்மன் திருக்கோவில் என்று பதிய வேண்டும் என்றும் இதில் விரைவான நடவடிக்கை எடுக்க திருமங்கலம் நகராட்சி ஆணையர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகத் தாழ்மையுடனும் பணிவன்புடனும் வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.12.2022 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருமங்கலம் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் தனது 11.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"திருமங்கலம் டவுன், நகராட்சி எல்லைக்குட்பட்ட கணபதி நகர் இராஜாஜி தெருவில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி அருகில் சர்வே வார்டு –ஏ, பிளாக் எண்.25, பழைய சர்வே எண். 131/5–ல் கட்டப்பட்ட பரப்பு 32 சென்ட் இடமானது ஸ்ரீமாலையம்மன் திருக்கோவில் இடம் என்றும், இவ்விடத்தில் திரு. விஜய், த/பெ.ராஜ் திரு. மதன் த/பெ.ஸ்ரீதரன் ஆகியோர் பட்டா பெற்று ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும், சிலர் பட்டா பெறாமல் இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும், மேற்படி இடத்தினை முழுவதும் அளந்து, அத்துமால் காண்பித்து, ஆக்கிரமிப்புகளையும், போலியாக பட்டா பெற்ற நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், பட்டாவை

ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவும் திருமங்கலம் நகராட்சிக்கு திரு.ஆர்.மயில்சாமி, என்பவரிடமிருந்து 05.12.2022 ஆம் தேதியில் மனு வரப்பட்டதன்படி, மனுவில் தெரிவிக்கப்பட்ட இடம் சர்வே வார்டு–ஏ, பிளாக் எண்.25, பழைய சர்வே எண்.131/5 பரப்பு 32 செண்ட் இடமானது நகரளவு கணக்கில் யார் பெயரில் உள்ளது என்ற விவரமும், ஆக்கிரமிப்பு ஏதும் செய்யப்பட்டுள்ளதா என்ற விவரத்தினை வழங்க வட்டாட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு, நகல் ஒன்று திரு.ஆர்.மயில்சாமி என்பவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்கடிதம் தொடர்பாக விவரம் வழங்க மீண்டும் வட்டாட்சியருக்கு நினைவூட்டு கடிதம் 10.04.2022 ஆம் தேதியில் அனுப்பப்பட்டுள்ளது. இந்நாள் வரை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து திருமங்கலம் நகராட்சி அனுப்பிய கடிதத்திற்கு பதில் ஏதும் வரப்பெறவில்லை. மேலும் மனுவில் தெரிவிக்கப்பட்ட ஸ்ரீமாலையம்மன் திருக்கோவில் இடத்தில் தனியருக்கு பட்டா வழங்கியது மற்றும் பட்டா ரத்து செய்வது தொடர்பான நடவடிக்கை, தனியார் இடங்கள், கோவிலுக்கு சொந்தமான இடங்கள் அளவீடு செய்யும் பணி, அத்துமால் காண்பிக்கும் பணி ஆகிய அனைத்தும் நகராட்சி சட்ட விதிகளின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது. பட்டா வழங்குவது, பட்டா ரத்து செய்வது தொடர்பான பணிகள் வருவாய்த்துறையினை சார்ந்த பணியாகும்.

நகரளவு பணி தொடர்பான, உட்பிரிவு பணி, பட்டா பெயர் மாற்றம் தொடர்பான பணி, அளவீடு செய்தல் தொடர்பான அனைத்து பணிகளும் நகரளவர் மூலமாக வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று ஆவணங்கள், கோப்புகள் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் பெறப்படும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஆக்கிரமிப்பு தொடர்பான மனுக்கள், நகரளவர் மூலமாக அளவீடு செய்து திருமங்கலம் நகராட்சி மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தனியாருக்கு சொந்தமான இடங்கள், கோவில் இடங்கள் ஆக்கிரமிப்பு தொடர்பான நடவடிக்கையை நகராட்சி சட்ட விதிகளின்கீழ் மேற்கொள்ள இயலாது. அவ்வாறான இடங்களில் ஆக்கிரமிப்பு தொடர்பாக பெறப்படும் மனுக்கள் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, நகல் சம்பந்தப்பட்ட மனுதாரருக்கு வழங்கப்படும், சம்பந்தப்பட்ட மனுதாரர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு தீர்வு காணப்பட்டு வரும் நடைமுறை இருந்து வருகிறது.

ஆகவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் சமூகம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மனுதாரரின் புகாரில் எவ்விதஅடிப்படை ஆதாரமும் இல்லை என்ற நிலையில் தள்ளுபடி செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருமங்கலம் நகராட்சி ஆணையரும் 20.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. R. மயில்சாமி 20.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மதுரை மாவட்டம், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கணபதி நகர், சர்வே வார்டு A, செங்குளம் பிளாக் எண்.25 பழைய சர்வே எண்.131/5ல் ஸ்ரீமாலையம்மன் திருக்கோயிலுக்கு சொந்தமான 32 செண்ட் இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்திற்கான பட்டாவும் போலியாக பெற்றுள்ளனர். இது குறித்து நகராட்சி அலுவலர்களிடம் புகார் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே மேற்கண்ட போலி பட்டாவை ரத்து செய்ய ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் 20.04.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஸ்ரீமாலையம்மன் திருக்கோவில் இடத்தை தனியர்கள் ஆக்கிரமித்து போலி பட்டா பெற்றுள்ளதாக புகார் மனு பெறப்பட்டது. மனுதாரர் கோரியவாறு கோவிலுக்கு சொந்தமான இடத்தை அளவீடு செய்து அத்துமால் காண்பிப்பதற்கு நகராட்சி சட்ட விதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள இயலாது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பட்டா ரத்து செய்யும் பணிகள் வருவாய்த் துறையைச் சார்ந்ததால், சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கு இதுபோன்ற புகார் மனுக்கள் அனுப்பப்பட்டு அதன் விவரம் மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பான எனது 11.4.2023 நாளிட்ட அறிக்கையினை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருமங்கலம் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடியைச் சேர்ந்த மனுதாரர் திரு.R.மயில்சாமி என்பவர் தனது 19.12.2022 நாளிட்ட முறையீட்டு மனுவில், திருமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கணபதி நகர், இராஜாஜி தெரு, சர்வே வார்டு –ஏ, பிளாக் எண்.25, பழைய சர்வே எண்.131/5–ல் 32 செண்ட் பரப்பளவு கொண்ட ஸ்ரீமாலையம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தினை திரு.விஜய் மற்றும் திரு.மதன் என்பவர்கள் ஆக்கிரமிப்பு செய்து முறைகேடாக போலி பட்டாக்களை பெற்றும், வேறு சிலர் பட்டாயின்றியும் மேற்படி கோவில் இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக புகாராக தெரிவித்து, இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கணபதி நகர், இராஜாஜி தெரு, சர்வே வார்டு – ஏ, பிளாக் எண்.25, பழைய சர்வே எண்.131/5–ல் 32 செண்ட் பரப்பளவு கொண்ட ஸ்ரீமாலையம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தினை போலி பட்டா மற்றும் பட்டாயின்றி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிவிக்கும் இடமானது திருமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான இடமில்லை என்பது ஆணையாளரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. பொதுமக்களிடமிருந்து

பெறப்படும் நகராட்சிக்கு சொந்தமான இடங்கள் ஆக்கிரமிப்பு தொடர்பான மனுக்கள் மட்டுமே நகராட்சியில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டமானது தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் பணி செய்து கொண்டிருக்கும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மீதும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்பாக பெறப்படும் புகார்கள் மீதும் மட்டுமே இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

தனியார் கோவில் நிலங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. R. மயில்சாமி,
பிளாட் 5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை மாவட்டம் – 625 018.

2) ஆணையாளர், திருமங்கலம் நகராட்சி,
மதுரை மாவட்டம் – 625 706.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

05/05/23